அடகு நகை மீட்டு இன்றைய
மார்க்கெட் விலைக்கு விற்க
நீங்கள் இருக்கும்
இடத்திலேயே உடனடி பணம்
நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 310 | 4 Pages | 5.6.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 310 | 4 பக்கங்கள் | 5.6.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

# முதல்முறையாக ஐபிஎல் கோப்பை வென்ற பெங்களூரு அணிக்கு மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, ஜூன் 5

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், ஆமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்றிரவு அரங்கேறிய இறுதி ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

'டாஸ்' ஜெயித்த பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து பெங்களூரு அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து 191 ரன் எடுத்தால் சாம்பியன் பட்டத்தை வெல்லலாம் என்ற நிலையில் களம் புகுந்த பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 184 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன் மூலம் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணி 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று




முதல்முறையாக கோப்பையை சொந்தமாக்கியது. அத்துடன் 18 ஆண்டு கால விராட் கோலியின் கோப்பை ஏக்கம் தணிந்தது. பெங்களூரு தரப்பில் புவனேஷ்வர்குமார், குருணல் பாண்ட்யா தலா 2 விக்கெட் வீழ்த்தினர். அந்த அணிக்கு ரூ.20 கோடி பரிசுத்தொகையாக கிடைத்தது. வெற்றியை பெங்களூரு ரசிகர்கள்பட்டாசுவெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.

இந்த நிலையில், முதல்முறையாக ஐபிஎல் கோப்பை வென்ற பெங்களூரு அணிக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

"சபாஷ்.. ஆர்.சி.பி. பல ஆச்சர்யங்கள் நிறைந்த சீசனுக்கு நிறைவான ஒரு முடிவு. விராட் கோலி இந்தக் கோப்பைக் கனவை பல ஆண்டுகளாக சுமந்துள்ளார். இப்போது இந்த மகுடம் உங்களுக்கு பொருத்தமாக இருக்கும். சென்னை சூப்பர் கிங்ஸிடம் இருந்து அடுத்த சீசனில் சிறப்பான COME BACKயை எதிர்பார்க்கிறேன்"


இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின்

விளக்கம்:
ஒருவன் தன் மனதால் சினத்தை எண்ணாதிருப்பானானால் நினைத்த நன்மைகளை எல்லாம் அவன் ஒருங்கே பெறுவான்.

## காரில் சென்ற பா.ஜ.க. நிர்வாகி சுட்டுக்கொலை அதிர்ச்சி சம்பவம்



டேராடூன், ஜூன் 5

உத்தரகாண்ட் மாநிலம் மண்டவ்வாலா மாவட்ட பா.ஜ.க. நிர்வாகி ரோகித் நகி. இவர் அம்மாவட்ட பா.ஜ.க. இளைஞரணி தலைவராக செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில், ரோகித் நகி நேற்று முன் தினம் இரவு காரில் தனது நண்பர்களுடன் பிடல் சவுக் நகரில்உள்ளசாலையில்சென்றுகொண்டிருந்தார். அப்போது, பைக்கில் வந்த 2 பேர் திடீரென ரோகித்நகியின்காரைஇடைமறித்தனர். பைக்கில் பின்னால் அமர்ந்திருந்த நபர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியை கொண்டு காரில் இருந்த ரோகித் நோக்கி சரமாரியாக சுட்டார். பின்னர், உடனடியாக பைக்கில் 2 பேரும் தப்பிச்சென்றனர்.

இதனால்அதிர்ச்சியடைந்த ரோகித்தின்நண்பர்அவரைகாரிலேயே அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு ரோகித்தை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த போலீசார், ரோகித் மீது துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பிச்சென்ற உத்தரபிரதேசத்தை சேர்ந்த அசார் தியாகி என்ற நபரை தேடி வருகின்றனர். பெண் விவகாரத்தில் பா.ஜ.க. இளைஞரணி தலைவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## புதிய நிதி சட்டத்தின்படி ஓய்வூதியதாரர்களின் சலுகைகள் பறிப்பா? மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி, ஜூன் 5

மத்திய, மாநில அரசுகளில் பணியாற்றி ஓய்வுபெற்றவர்கள் ஏராளமானோர் உள்ளனர். இந்த சூழலில், மத்திய அரசு சமீபத்தில் நிதி சட்டம் 2025ஐ அமல்படுத்தியுள்ளது. இந்த சட்டத்தின்படி, 'அரசின் கொள்கை மாற்றத்தால் லட்சக்கணக்கான ஓய்வூதியதாரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். நிதி சட்டம் 2025, அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்றதற்கு பின்னர் பெறும் பல்வேறு வகையான பலன்களையும், சலுகைகளையும் பறிப்பதாக உள்ளது.

அந்தசட்டத்தில்உள்ளபிரிவுகளின்படி, அடுத்துவரஉள்ள8வதுஊதியக்குழு பரிந்துரையில் ஓய்வூதியதாரர்கள் ஊதிய உயர்வு சலுகைகள் அல்லது பஞ்சப்படி உயர்வு பெற தகுதியற்றவர்களாக கருதப்படுவார்கள்' என்ற தகவல் வாட்ஸ்அப், எக்ஸ், பேஸ்புக் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடகங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது.

சமூகஊடகங்களில்பரவும்இந்ததகவல்மத்தியமாநிலஅரசுகளில்பல்வேறு நிலைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மருத்துவம், பிள்ளைகளின் படிப்பு செலவு, வீடு, வாகனங்களுக்கான கடன் என பல்வேறு தேவைகளுக்காக ஓய்வூதியத்தை நம்பி இருப்பவர்களை கலக்கம் அடைய செய்துள்ளது. இதையடுத்து இதுதொடர்பாக மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து மத்திய அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான பத்திரிகை தகவல் அலுவலக தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள பதிவில், "இந்த தகவல் தவறானது. ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில் எந்த மாற்றமும் இல்லை. 2021ம் ஆண்டு திருத்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின்படி பொதுத்துறை ஊழியர் தவறான நடத்தைக்காக பணிநீக்கம் செய்யப்பட்டால், அவருடைய ஓய்வூதிய பலன்கள் பறிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது" என்று கூறப்பட்டுள்ளது.

## நடிகர் கமல்ஹாசன் நிச்சயம் மன்னிப்பு கேட்பார்: டி.கே.சிவக்குமார்



பெங்களூரு, ஜூன் 5

கர்நாடக துணை முதல்மந்திரி டி.கே.சிவக்குமார் பெங்களூருவில் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

நடிகர்கமல்ஹாசன், கன்னட மொழி குறித்த விவகாரத்தில் மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று கூறியுள்ளார். மன்னிப்பு கேட்கும்படி ஐகோர்ட்டு கூறியுள்ளது. அதனால் அவர் ஐகோர்ட்டை மதித்து நிச்சயம் மன்னிப்பு கேட்பார் என்று நம்புகிறேன். மாநிலத்தின் நலன், மொழியின் நலன் காக்க வேண்டும். நமது இலக்கியவாதிகளுடன் பேசினேன். நாம் திராவிட பகுதியை சேர்ந்தவர்கள். இதில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று இல்லை. அனைத்து மொழிகளும் ஒன்றாக வந்துள்ளது. கன்னடத்தில் சில தெலுங்கு வார்த்தைகள் உள்ளன. தமிழ், மலையாளத்திலும் கன்னடம், தெலுங்கு வார்த்தைகள் கலந்துள்ளன. நம்மவர்களும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும். போராட்டங்களை நடத்தியுள்ளோம். கோர்ட்டு உத்தரவை அனைவரும் பின்பற்ற வேண்டும். கமல்ஹாசன் மீது நாங்கள் மென்மையான போக்கை காட்டவில்லை. மொழி, சாதி, மாநிலங்களுக்கு இடையே சண்டையை ஏற்படுத்த முடியுமா?. பா.ஜனதாவினர் எப்போதும் பிரிவினையை ஏற்படுத்துகிறார்கள். நாங்கள் ஒன்றுபடுத்துபவர்கள். அவர்கள் கத்திரிக்கோல், நாங்கள் ஊசி. ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் யார் பொறுப்பு?. இவ்வாறு அவர் கூறினார்.

## கோவிந்தராஜ சுவாமி கோவில் பிரம்மோற்சவ விழா: ஹம்ச வாகனத்தில் உற்சவர் வீதி உலா

திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோவிலில் பிரம்மோற்சவ விழா விமரிசையாக நடைபெற்று வருகிறது. விழாவின் முதல் நாளான நேற்று முன்தினம் காலை 10 மணியில் இருந்து 11 மணி வரை கல்யாண மண்டபத்தில் உற்சவர்களான ஸ்ரீதேவி, பூதேவி, கோவிந்தராஜ சுவாமிக்கு பால், தயிர், தேன், சந்தனம், பல்வேறு பழச்சாறுகளால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. மாலை 5.30 மணியில் இருந்து 6 மணி வரை ஊஞ்சல் சேவை, இரவு 7 மணிக்கு பெரிய சேஷ வாகன வீதிஉலா நடந்தது. 2ம் நாளான நேற்று காலை 7 மணிக்கு சின்னசேஷ வாகனத்தில் கோவிந்தராஜ சுவாமி உற்சவர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். தொடர்ந்து 4 மாட வீதிகளில் சாமி வீதி உலா நடந்தது. அப்போது பக்தர்கள் சாமிக்கு கற்பூர ஆரத்தி காட்டி வழிபட்டனர். வாகன சேவையை முன்னிட்டு பக்தர்களின் ஊர்வலங்களும், பஜனைகளும் மற்றும் கோலாட்டங்களும் நடைபெற்றன. மாலை 5.30 மணி முதல் 6 மணி வரை ஊஞ்சல் சேவை நடந்தது. இரவு 7 மணிக்கு ஹம்ச வாகனத்தில் சாமி வீதிஉலா நடந்தது. அப்போது கலைக்குழுக்களின் பாடல்கள் மற்றும் நடனங்கள் நடந்தன. திருமலையின் இரு ஜீயர்கள், தேவஸ்தான நிதி அதிகாரி ஸ்ரீபாலாஜி மற்றும் ஊழியர்கள், திரளான பக்தர்கள், ஸ்ரீவாரி சேவகர்கள் கலந்து கொண்டனர். பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக 6ந்தேதி கருட வாகன வீதிஉலா, 9ந்தேதி தேரோட்டம், 10ந்தேதி சக்கர ஸ்நானம் நடக்கிறது

## சவுதி அரேபியா பாலைவனத்தில் ஒட்டகம், ஆடு மேய்த்து சித்ரவதைக்கு ஆளான தமிழர்: கடும் போராட்டத்துக்கு பின்பு மீட்பு

திருச்சி, ஜூன் 5

நாகப்பட்டினம் மாவட்டம் பெரியதும்பூர் கிராமத்தை சேர்ந்தவர் கவாஸ்கர் (வயது 45). இவருடைய மனைவி உதயஜோதி. இந்த தம்பதிக்கு 2 மகன்கள், ஒரு மகள் உள்ளனர். கூலித்தொழிலாளியான கவாஸ்கர் கடந்த 5 மாதத்துக்கு முன்பு டிராவல்ஸ் நிறுவனம் மூலம் சவுதிஅரேபியாவுக்கு வீட்டு வேலைக்காக சென்றார்.

அங்கு சென்றதும் அவரை பாலைவனத்தில் ஒட்டகம் மற்றும் ஆடு மேய்க்கும் பணியில் ஈடுபடுத்தியதாக கூறப்படுகிறது. அவர் அந்த பணியை செய்ய மறுத்ததால் அவரை சரமாரியாக தாக்கியுள்ளனர். பல்வேறு துன்புறுத்தல்களை அனுபவித்து வந்த கவாஸ்கர், செல்போன் மூலம் தனது மனைவியிடம் இது பற்றி கூறி அழுதுள்ளார்.

இதையடுத்து அவரது மனைவி உதயஜோதி நாகப்பட்டினத்தில் உள்ள நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளிடம் இதுபற்றி கூறியுள்ளார். அவர்கள், அரபுநாட்டில் உள்ள செந்தமிழர் பாசறை அமைப்பு மூலம் அவரை மீட்பதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். சட்டரீதியாக எடுத்த முயற்சிகள் எதுவும் பலன் அளிக்காத நிலையில், சம்பந்தப்பட்ட ஒட்டகப்பண்ணை உரிமையாளரிடம் விசா கட்டணம் ரூ.1½ லட்சம் கொடுத்து கவாஸ்கரை மீட்டனர்.

இதையடுத்து கவாஸ்கர் சவுதியில் இருந்து நேற்று காலை விமானம் மூலம் திருச்சி வந்தார்.

திருச்சி விமான நிலையத்தில் அவருடைய மனைவி உதயஜோதி மற்றும் மகள், மகன் ஆகியோர் கவாஸ்கரை கண்ணீர் மல்க வரவேற்றனர். குடும்பத்தினரை கண்ட அவரும் கண்ணீர் விட்டு கதறி அழுதார். இதையடுத்து நாம்



தமிழர் கட்சி நிர்வாகிகள் அவரை சமாதானப்படுத்தி குடும்பத்தினருடன் அனுப்பி வைத்தனர்.

சவுதிஅரேபியாவில் இருந்து மீட்கப்பட்ட கவாஸ்கர் கூறும்போது, "சவுதியில் தினமும் அதிகாலை 4.30 மணிக்கெல்லாம் புறப்பட்டு சுமார் 3½ மணி நேரம் நடந்து செல்ல வேண்டும். அங்கு தான் ஒட்டகம், ஆடுகளை மேய்க்க வேண்டும். பின்னர் அவற்றுக்கு தீவனம் வைப்பது, தண்ணீர் வைப்பது போன்ற வேலைகளை செய்ய வேண்டும்.

வேலையை செய்ய மறுத்தால் அங்கிருந்த 2 பெண்கள் என்னை அடித்து துன்புறுத்துவார்கள். நான் செல்போன் பேசுவதைகூட அங்கு யாருக்கும் தெரியாமல் ரகசியமாகத்தான் பேசுவேன். அப்படி பேசித்தான் அங்குள்ள எனது நிலைமையை குடும்பத்தினரிடம் தெரிவித்தேன். ஒருகட்டத்தில் எனது சிம் கார்டையும் பறித்துக் கொண்டனர்.

இதற்கிடையே என்னை அனுப்பி வைத்த டிராவல்ஸ்காரரிடம் போன் செய்து கேட்டபோது, என்னிடமும் வீட்டு வேலை என்று தான் கூறினார்கள். மற்றபடி எனக்கு எதுவும்தெரியாதுஎன்றுகூறிவிட்டார். தற்போது என்னை பல போராட்டங்களுக்கு பிறகு அங்கிருந்து மீட்டு அழைத்து வந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கண்ணீருடன் கூறினார்.

## த.வெ.க. சார்பில் 2ம் கட்டமாக கல்வி விருது விழா: விஜய் தலைமையில் தொடக்கம்

சென்னை ஜூன் 5

மாணவ, மாணவியரின் கல்வி ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் ஆண்டுதோறும் கல்வி விருது வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. கடந்த 2 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த விருது வழங்கும் விழாவில் தமிழகம், புதுச்சேரியில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தவெக தலைவர் விஜய் விருது, பரிசு பொருட்களை வழங்கி கவுரவித்து வருகிறார்.



அந்த வகையில், த.வெ.க. சார்பில் கல்வி விருது வழங்கும் விழா தற்போது 3ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. முதற்கட்டமாக கடந்த 30ம் தேதி நடைபெற கல்வி விருது வழங்கும் விழாவில் தமிழகத்தில் 18 மாவட்டங்களை சேர்ந்த 88 தொகுதிகளில் 600 மாணவ, மாணவிகளுக்கு த.வெ.க தலைவர் விஜய் கல்வி விருது வழங்கி கவுரவித்தார்.

இந்நிலையில், த.வெ.க. சார்பில் 2ம் கட்டமாக கல்வி விருது வழங்கும் விழா இன்று நடைபெற்று வருகிறது. மாமல்லபுரத்தில் உள்ள தனியார் ஓட்டலில் நடைபெறும் இந்த விழாவில் 10 மற்றும் 12ம் வகுப்புகளில் முதல் 3 இடங்களை பிடித்த 84 தொகுதிகளை சேர்ந்த மாணவ, மாணவியருக்கு த.வெ.க. தலைவர் விஜய் பரிசு, ஊக்கத்தொகை, சான்றிதழ் வழங்கி கவுரவித்து வருகிறார்.

இந்த நிகழ்ச்சியில் த.வெ.க. தலைவர் விஜய் சட்டமன்ற தேர்தல்,அரசியல் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிய உத்தரவிடப்படும் அன்பில் மகேஷ் பொய்யாமொழி

சென்னை ஜூன் 5

தமிழகத்தில் கொரோனா பரவல் மெல்ல அதிகரித்து வருகிறது. மாநிலத்தில் 215 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கோடை விடுமுறை முடிந்து தமிழகத்தில் கடந்த 2ம் தேதி முதல் பள்ளிகள் திறக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிய உத்தரவிடப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார். இது தொடர்பாக



அவர் கூறுகையில், தமிழகத்தில் கொரோனா பரவல் இருந்தாலும், அந்த அளவிற்கு தீவிரம் இல்லை. தேவைப்பட்டால் பள்ளிகளில் முகக்கவசம் அணிவதற்கு உத்தரவிடப்படும். இருப்பினும் பள்ளிக் கல்வித்துறை சார்பில் அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன' என்றார்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

# போதையில்லா தமிழகம் விழிப்புணர்வு கால்பந்து போட்டி: எஸ்.பி. பரிசு வழங்கல்

தூத்துக்குடி ஜூன்5 தமிழ்நாடு முதல்அமைச்சரின் "போதையில்லா தமிழகம்" என்ற விழி ப்புணர்வு பிரச்சாரத்தின் அடிப்படையில் அதனை பரப்பும் வகையில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக மாவட்டம் முழுவதும் அனைத்து கிராம பகுதிகளிலும் பொதுமக்களுக்கு இடையே விழிப்புணர்வு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது.




அதன்படி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் தலைமையில் ஆறுமுகநேரி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட காயல்பட்டினம் பகுதியில் போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக 4 பொதுமக்கள் அணியினர் கலந்து கொண்டு விழிப்புணர்வு கால்பந்து விளையாட்டு போட்டி நடைபெற்றது.

இந்த விளையாட்டு போட்டியின் தொடக்கநிகழ்வாக அனைத்து அணி விளையாட்டு வீரர்கள் மற்றும் மாவட்ட எஸ்.பி., திருச்செந்தூர் உட்கோட்ட டி.எஸ்.பி. (பொறுப்பு) குருவெங்கட்ராஜ், ஆறுமுகநேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கராஜ் உட்பட காவல்துறையினர், காயல் பட்டினம் நகராட்சி நகர் மன்ற தலைவர் முத்துமுகமது உட்பட பொதுமக்கள் உள்ளிட்டோர் போதைபொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். அதனைத்தொடர்ந்து இறுதி விளையாட்டு போட்டியை மாவட்ட எஸ்.பி. துவக்கி வைத்தார்.

பின்னர் இந்நிகழ்ச்சியின் நிறைவாக மாவட்ட எஸ்.பி. போதை பொருட்களால் ஏற்படும் அபாயம் குறித்தும், இளைஞர்கள் போதை பொருட்களை தவிர்த்து தங்கள் எதிர்காலத்தில் சமூகத்தில் சிறந்தவர்களாக திகழ வேண்டும் என்றும் போதைப்பொருள் தடுப்பு குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தி, கால்பந்து விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்று முதல் இடத்தை பிடித்த காயல்பட்டினம் ஐக்கிய விளையாட்டு சங்கம் அணிக்கு பரிசு கோப்பை வழங்கி பாராட்டினார்.

# நெல்லை: பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறப்பு

நெல்லை, ஜூன் 5 நெல்லை மாவட்டம் பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களில் இருந்து தாமிரபரணி பாசனத்தில் உள்ள வடக்கு கோடை மேலழகியான் கால்வாய் (2,260 ஏக்கர்), தெற்கு கோடை மேலழகியான் கால்வாய் (870 ஏக்கர்), நதியுண்ணி கால்வாய் (2,460 ஏக்கர்), கன்னடியன் கால்வாய் (12,500 ஏக்கர்), கோடகன் கால்வாய் (கண்டியப்பேரிகுளம் வரை 5,048 ஏக்கர்) பாளையங் கால்வாய் (தாமரைக்குளம் வரை 5,974 ஏக்கர்), நெல்லை கால்வாய் (வண்ணாண்பச்சேரிகுளம் வரை 4,168 ஏக்கர்) மற்றும் தூத்



துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றில் உள்ள மருதூர் மேலக்கால் வாய்க்கால் (4,554 ஏக்கர்), மருதூர் கீழக்கால் வாய்க்கால் (2,970 ஏக்கர்), தென்கால் வாய்க்கால் (2,693 ஏக்கர்) மற்றும் வடகால் வாய்க்கால் (3,289 ஏக்கர்) ஆகிய 11 கால்வாய்களின் கீழுள்ள 46 ஆயிரத்து 786 ஏக்கர் நேரடி மற்றும் மறைமுக பாசனப்பரப்பு நிலங்களுக்கு கார் பருவ சாகுபடிக்கும், குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்கும் இன்று தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. சபாநாயகர் அப்பாவு அணையிலிருந்து தண்ணீரை திறந்து வைத்தார்.

இதன் மூலம் நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம்,

சேரன்மகாதேவி, நெல்லை மற்றும் பாளையங்கோட்டை உள்ளடக்கிய வட்டங்கள் மற்றும் கிராமங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம், ஏரல் உள்ளடக்கிய வட்டங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள 46 ஆயிரத்து 786 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

# மணிமுத்தாறு அருவியில் குளிக்க 10வது நாளாக தடை

நெல்லை, ஜூன் 5 தென்மேற்குப் பருவ மழை கடந்த வாரம் தொடங்கியதை அடுத்து, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. நெல்லை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மணிமுத்தாறு அருவியில் தற்போது காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பு கருதி



மணிமுத்தாறு அருவியில் குளிக்க 10 வது நாளாக வனத்துறையினர் தடைவிதித்தனர். பல்வேறு மாவட்டங்களிலிருந்து மணிமுத்தாறு அருவிக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

# சென்னையில், கொரோனா தொற்றால் மேலும் ஒருவர் பலி

சென்னை, ஜூன் 5 உலகையே உலுக்கிய கொரோனாவின் கோரப்பிடியில் இருந்து மக்கள் நிம்மதிப்பெருமூச்சு விட்டு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளனர். இந்நிலையில் மீண்டும் பல்வேறு நாடுகளில் கொரோனா அச்சுறுத்தல் தொடங்கியுள்ளது. இந்தியாவில் தற்போது வரை 4000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் அதற்கான தீவிரம் இன்னும் தொடங்காத நிலையில் சுகாதாரத்துறை சார்பில் எவ்வித அச்சமும் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சென்னை, சவுகார்பேட்டையைச் சேர்ந்த 69 வயது மூதாட்டி ஒருவருக்கு கருப்பை வாய் புற்றுநோய் இருந்தது.

இதற்காக கீமோதெரபி சிகிச்சையில்அவர்இருந்து வந்தார். அதனுடன் சர்க்கரை நோய் மற்றும் நடுக்குவாதம் (பார்க்கின்சன்) பாதிப்பும் இருந்தது. இந்த நிலையில், அவருக்கு இதய செயலிழப்பும் ஏற்பட்டதால் சேத்துப்பட்டில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் மூதாட்டி கடந்த மாதம் 29ந் தேதி அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவப் பரிசோதனையில் ரத்தத்தில் கிருமித் தொற்று (செப்சிஸ்) ஏற்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. தொடர்ச்சியாக, புற்றுநோய் மற்றும் இதய செயலிழப்புக்கான சிகிச்சைகள் அவருக்கு வழங்கப்பட்ட நிலையில் சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டதால் கொரோனா பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

அதில் மூதாட்டிக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்த சூழலில் கடந்த 1ந் தேதி அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கான முக்கிய காரணம் இணைநோய்கள் தான்என்றுசுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை: விடுபட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூன் 5 பெண்களின்வாழ்க்கை தரத்தை மேம்படுத்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்' தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக, மாநிலம் முழுவதும் 1.14 கோடி பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.1,000 செலுத்தப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், 1 கோடியே 14 லட்சம் பெண்கள் தவிர 1 கோடியே 12 லட்சம் பெண்கள் உரிமைத் தொகை பெற முடியவில்லை. எனவே தகுதியான விடுபட்ட பெண்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்படும் என்று கடந்த சட்டசபை கூட்டத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். மேலும் பெண்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்களை உடனடியாக ஆய்வு செய்து 2 மாதத்திற்குள் அவர்களுக்கு உரிமைத்தொகை வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் விடுபட்டவர்கள்இன்று விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் 9,000 இடங்களில் புதிதாக இணைபவர்களுக்கான விண்ணப்பபதிவு முகாம்கள் இன்று நடைபெற உள்ளன. இதில், அதிகபட்சம் 15 லட்சம் பேர் வரை புதிதாக சேரக்கூடும் என்று கூறப்படுகிறது. முகாமில் கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் ஜூலை மாதம் முதல் அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.1,000 வழங்கப்படும்.

என்னென்ன ஆவணங்களை எடுத்து செல்ல வேண்டும்? ரேஷன் அட்டை ஆதார் அட்டை வாக்காளர் அடையாள அட்டை வங்கி கணக்கு புத்தகம் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் கொண்டு செல்ல வேண்டும். வங்கி கணக்குடன் ஆதார் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மொபைல் போனையும் கொண்டு செல்ல வேண்டும்.

யார் யார் விண்ணப்பிக்கலாம்?

குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்திற்குக் கீழ் உள்ளவர்கள்

ஆண்டு ஒன்றுக்கு வீட்டு உபயோகத்திற்கு 3600 யூனிட்டிற்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்துபவர்கள்.

ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நன்செய் நிலம் அல்லது பத்து ஏக்கருக்குக் குறைவாகப் புன்செய் நிலம் வைத்துள்ளவர்கள் இந்த திட்டத்தில் தாராளமாக இணையலாம்.

யார் யாருக்கு வாய்ப்பு இல்லை?

மத்திய, மாநில, அரசு ஊழியர்கள், பொதுத் துறை நிறுவனங்கள், வங்கிகளின் ஊழியர்கள், வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு அமைப்புகளின் ஊழியர்கள் மற்றும் அவற்றின் ஓய்வூதியதாரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் திட்டத்தில் இணைய வாய்ப்பு இல்லை.

ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்களைத் தவிர பிற தேர்ந்தெடுக்கப் பட்டமக்கள்பிரதிநிதிகள் அதாவது ஊராட்சி மன்ற தலைவர்கள், பேரூராட்சி கவுன்சிலர்கள், தலைவர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாய்ப்பு இல்லை.

சொந்தப் பயன்பாட்டுக்கு கார், ஜீப், டிராக்டர் போன்ற நான்கு சக்கர வாகனங்கள் வைத்துள்ளவர்களும் இணைய முடியாது. தொடர் சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியம் மற்றும் அரசிடமிருந்து ஓய்வூதியம் பெறும் குடும்பங்களும் வாய்ப்பு இல்லை.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கான விண்ணப்பங்களை நிரப்பி முகாமில் ஆவணங்களை காட்டி சமர்ப்பிக்கவேண்டும். பின்னர் அந்த விண்ணப்பங்களை அரசு அலுவலர்கள் ஆராய்ந்து விண்ணப்பதாரர்கள் பயனாளர்களாக இணைய தகுதிபடைத்தவர்களா என்பதை உறுதி செய்ய வேண்டும். திட்டத்தில் பயனாளர்களாக இணைக்கப்பட்டாலோ அல்லது நிராகரிக்கப்பட்டாலோ விண்ணப்பதாரர்களின் எண்ணுக்குகுறுஞ்செய்தி அனுப்பப்படும்.

# நெல்லை தென்காசியில் மின்வாரிய குறைதீர்க்கும் கூட்டம்: மேற்பார்வை பொறியாளர் தகவல்




திருநெல்வேலி ஜூன் 5 திருநெல்வேலி மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருநெல்வேலி மின்பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் உள்ள மின்வாரிய கோட்ட அலுவலகங்களில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகங்களில் இன்று முதல் காலை 11 மணியளவில் பின்வருமாறு ஜூன் மாதத்திற்கான மின்சார வாரியம் சார்ந்த குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும்.

அதன்படி முதலாவது செவ்வாய்கிழமை வள்ளியூர் கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 6.6.2025 முதலாவது வெள்ளிக்கிழமை சங்கரன்கோவில் கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 10.6.2025 இரண்டாவது செவ்வாய் கிழமைதென்காசிகோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 13.6.2025 இரண்டாவது வெள்ளிக்கிழமை திருநெல்வேலி கிராமப்புற கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 17.6.2025 3வது செவ்வாய்கிழமை கடையநல்லூர் கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 20.6.2025 மூன்றாவது வெள்ளிக்கிழமை திருநெல்வேலி நகர்ப்புற கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும், 24.6.2025 நான்காவது வெள்ளிக்கிழமை கல்லிடைக்குறிச்சி கோட்ட அலுவலக செயற்பொறியாளர் அலுவலகத்திலும் மின்வாரிய குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# துணைவேந்தர் நியமனத்திற்கு தடை: சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு மேல்முறையீடு



சென்னை, ஜூன் 5 தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கி தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத்துக்கு உச்ச நீதிமன்றம் தனதுசிறப்புஅதிகாரத்தை பயன்படுத்தி ஒப்புதல் அளித்தது. இதைத்தொடர்ந்து, துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பானசட்டத்தை தமிழக அரசு, அரசிதழில் வெளியிட்டது.

இந்த சட்டத்தை ரத்து செய்யக்கோரி நெல்லையை சேர்ந்த வக்கீல் வெங்கடாசலபதி என்பவர்சென்னைஉயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமண்றம் பிரதான மனுவுக்கு பதிலளிக்க அரசுக்கு உத்தரவிட்டு, இடைக்கால தடை கோரிய மனு மீதான விசாரணையை தள்ளிவைத்தது.

இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களை கேட்ட நீதிமன்றம், துணை வேந்தர்களை நியமிக்கும் வேந்தரின் அதிகாரத்தை அரசுக்கு வழங்கி நிறைவேற்றப்பட்ட சட்டப்பிரிவுகளுக்கு, இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டனர்.

இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடையை எதிர்த்து தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்துள்ளது. இந்த மனு மீது விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

# சென்னை: கழன்று தொங்கிய பேருந்தின் கதவு ஆபத்தான முறையில் பொதுமக்கள் பயணம்

சென்னை, ஜூன் 5 சென்னை எண்ணூரில் அரசு பேருந்தின் கண்ணாடி கழன்று விழும் நிலையில் இருந்ததால் ஆபத்தான முறையில் பொதுமக்கள் பயணம் செய்தனர். எண்ணூரில் இருந்து பிராட்வே வரை செல்லும் தடம் எண் 4 மாநகரப் பேருந்தின் பின்பக்க கண்ணாடி கழன்று தொங்கியபடி இருந்தது.

அந்த பேருந்தில் பயணித்த பயணிகள் தொங்கிய கதவை கையில் பிடித்து ஆபத்தானமுறையில் பேருந்தில் பயணம் செய்தனர். எனவே, போக்குவரத்து துறை அதிகாரிகள் கவனம் செலுத்தி, பேருந்தின்



தரத்தை உயர்த்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்

# பராமரிப்பு பணி: தென்மாவட்ட ரெயில்களின் போக்குவரத்தில் மாற்றம்



சென்னை, ஜூன் 5 தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

மதுரை கோட்ட ரெயில்வேக்கு உள்பட்ட வாடிப்பட்டி கொடைரோடு இடையே உள்ள பகுதிகளில் தண்டவாள பராமரிப்பு பணிகள் நடக்க இருப்பதால் அந்த பாதையில் இயக்கப்படும் தென் மாவட்ட ரெயில்களின் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, செங்கோட்டை மயிலாடுதுறை ரெயில் (வ.எண்.16848) வருகிற 6ந் தேதி முதல் 11ந் தேதி வரை விருதுநகரில் இருந்து மானாமதுரை, காரைக்குடி, புதுக்கோட்டை வழியாக திருச்சி செல்கிறது. இதற்காக இந்த ரெயில் அருப்புக்கோட்டை, மானாமதுரை, சிவகங்கை மற்றும் காரைக்குடி ஆகிய ரெயில் நிலையங்களில் நிறுத்தப்படும்.

மறுமார்க்கத்தில் மயிலாடுதுறை செங்கோட்டை ரெயில் (வ.எண்.16847) இன்று (புதன்கிழமை), வருகிற 8ந் தேதி மற்றும் 11ந்தேதிகளில்திருச்சியில் இருந்து காரைக்குடி, மானாமதுரை வழியாக விருதுநகர் வந்தடையும். இந்த ரெயில் புதுக்கோட்டை, காரைக்குடி, சிவகங்கை, மானாமதுரை, அருப்புக்கோட்டை ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

கன்னியாகுமரி சரளப்பள்ளி வாராந்திர சிறப்பு ரெயில் (வ.எண். 07229) வருகிற 6ந் தேதி மற்றும் 13ந் தேதிகளில் விருதுநகரில் இருந்து மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்கிறது. இந்த ரெயில் மானாமதுரை மற்றும் காரைக்குடி ஆகிய ரெயில்நிலையங்களில் நின்று செல்லும்.

கன்னியாகுமரிஹவுரா வாராந்திர எக்ஸ்பிரஸ் ரெயில் (வ.எண்.12666) வருகிற 7ந் தேதி விருதுநகரில் இருந்து மானாமதுரை, காரைக்குடி வழியாக திருச்சி செல்லும். இந்த ரெயில் மானாமதுரை, காரைக்குடி மற்றும் புதுக்கோட்டை ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

மாதா வைஷ்ணவதேவி கத்ராநெல்லை வாராந்திர ரெயில் (வ.எண்.16788) நாளை (வியாழக்கிழமை) மற்றும் 12ந் தேதிகளில் திருச்சியில் இருந்து காரைக்குடி, மானாமதுரை வழியாக விருதுநகர் வந்தடையும். இந்த ரெயில் புதுக்கோட்டை, காரைக்குடி மற்றும் மானாமதுரை ஆகிய ரெயில் நிலையங்களில் நின்று செல்லும்.

அதேபோல, கோவை நாகர்கோவில் ரெயில் (வ.எண்.16322) வருகிற 6ந் தேதி முதல் 14ந் தேதி வரை திண்டுக்கல் ரெயில் நிலையத்துடன் நிறுத்தப்படும். மதுரைகச்சிக்குடா வாராந்திர சிறப்பு ரெயில் (வ.எண்.07192) இன்று (புதன்கிழமை) மற்றும் 11ந் தேதி ஆகிய நாட்களில் மதுரை ரெயில் நிலையத்தில் இருந்து வழக்கமான நேரத்திற்கு பதிலாக சுமார் ஒரு மணி நேரம் தாமதமாக மதியம் 12 மணிக்கு புறப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காதலிக்கு வேறொரு நபருடன் திருமணமானதால் இளைஞர் விஷம் குடித்து தற்கொலை

கன்னியாகுமரி ஜூன் 5 கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல்சலேட்நகரை சேர்ந்தவர் ராஜேந்திரன். இவருடைய மகன் சுபித் (வயது22). இவர் பி. எஸ்சி. பயோடெக்னாஜி படித்துள்ள சுபித் மணவாளக்குறிச்சியில் உள்ள ஒரு கடையில் வேலை பார்த்து வந்தார். கல்லூரி படிக்கும்போது சுபித்தும் அதே கல்லூரியில் படித்துவந்த ஒரு மாணவியும் காதலித்து வந்துள்ளனர். காதலி தன்னை தான் திருமணம் செய்வார்எனஅவர் உறுதியாக நம்பியிருந்தார்.

இதனிடையே, கடந்த வாரம் அந்த பெண்ணிற்கு வேறொரு நபருடன் திருமணம் நடந்துள்ளது. இது குறித்து அறிந்த இளைஞர் சுபித் மிகவும் மன உளைச்சல் அடைந்துள்ளார். அவரை உறவினர்களும், நண்பர்களும் தேற்றி வந்தனர்.

இந்நிலையில், காதலிக்கு வேறொரு நபருடன் திருமணம் ஆனதை தாங்கி கொள்ள முடியாத சுபித் கடந்த 31ம் தேதி வீட்டில் விஷம் குடித்து மயங்கி கிடந்தார். அவரை வீட்டில் உள்ளவர்கள் மீட்டு குளச்சலில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் சிகிச்சைபலனின்றி நேற்று சுபித் உயிரிழந்தார்.




இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். காதலிக்கு வேறொரு நபருடன் திருமணமானதால் இளைஞர் விஷம் குடித்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

## திருநெல்வேலி: 2 யூனிட் எம்.சாண்ட் மணல் மினிலாரி பறிமுதல் வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 5

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், தெற்கு கள்ளிகுளம் அருகே வள்ளியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் நேற்று வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவர் ஏர்வாடி, எல்.என்.எஸ். புரம், நடுத்தெருவை சேர்ந்த முகேஷ் (வயது 29) என்பவர் ஓட்டி வந்த மினி




டிப்பர் லாரியை நிறுத்தி சோதனைசெய்தார். அதில் உரிய அனுமதி சீட்டு இன்றி சட்டவிரோதமாக எம்.சாண்ட் மணலை ஏற்றிவந்தது தெரியவந்தது.

இதனையடுத்து மேற்சொன்ன வாலிபரை, போலீஸ் இன்ஸ்பெக்டர் வள்ளியூர் காவல் நிலையம் அழைத்துச்சென்று வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு உரிய அனுமதியில்லாமல் எம்.சாண்ட் மணலை ஏற்றி வந்த முகேஷை நேற்று கைது செய்தார். மேலும் அவரிடமிருந்து 2 யூனிட் எம்.சாண்ட் மணலையும், ஒரு மினி டிப்பர் லாரியையும் பறிமுதல்செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த உரிய சட்ட நடவடிக்கை எடுத்தார்.

## பொள்ளாச்சி அருகே கழுத்தில் மாலையுடன் போலீஸ் நிலையத்தில் தஞ்சம் அடைந்த ஜோடி



கோவை, ஜூன் 5

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள வடக்கு நல்லிகவுண்டன் பாளையத்தைச் சேர்ந்தவர் ஜிஷ்னு (21) இவர் வேலாயுதம் பாளையம் பகுதியில் உள்ள தனியார் கோழி பண்ணையில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகிறார். இவருக்கும் பொள்ளாச்சி குமரன் நகர் பகுதியில் வசித்து வரும் சினேகா (22) என்ற இளம்பெண்ணும் கடந்த ஒரு ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் இன்று இவர்கள் இருவரும் வீட்டை விட்டு வெளியேறி கிணத்துக்கடவு அருகே உள்ள முத்துமலை முருகன் கோவிலில் திருமணம் செய்துவிட்டு கிணத்துக்கடவு போலீஸ் நிலையத்தில் கழுத்தில் மாலையுடன் தஞ்சம் அடைந்தனர். காதலர்கள் இவரிடமும் போலீசார் கேட்டதற்கு, எங்களது திருமணத்தை பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதால் போலீஸ் நிலையத்தில் தஞ்சம் புகுந்துள்ளோம் என்றனர்.

அதன் பின்னர் போலீசார் ஜிஷ்னு, சினேகா ஆகியோரின் தகவலை பெற்றோர்களுக்கு தெரிவித்தனர். இதனையடுத்து இருவீட்டார்களும் கிணத்துக்கடவு போலீஸ் நிலையத்திற்கு வந்தனர். பின்னர் கிணத்துக்கடவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சகாதேவன் இரு குடும்பத்தாரிடம் பேச்சுவார்த்தை நடத்தி அனுப்பி வைத்தார்.

## நெல்லை: சொரிமுத்து அய்யனார் கோயிலுக்கு செல்லும் உள்ளூர் மக்களிடம் கட்டணம் வசூலிக்கக்கூடாது: ஐகோர்ட் மதுரை கிளை

நெல்லை, ஜூன் 5

நெல்லை மாவட்டம் அகஸ்தியர் அருவியில் குளிப்பதற்கும், அப்பகுதியில் வாகனங்கள் நிறுத்துவதற்கும் வனத்துறை சார்பாக பணம் வசூலிக்கப்படுகிறது. இதற்கு தடை விதிக்கக் கோரி அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா ஐகோர்ட் மதுரை கிளையில் பொதுநல வழக்கு ஒன்று தொடர்ந்தார்.

அதில், "திருநெல்வேலி மாவட்டத்தில் அருள்மிகு அகஸ்தியர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சொரிமுத்து அய்யனார் திருக்கோயில்' என்ற பெயரில் புகழ்பெற்ற மற்றும் பாரம்பரியமிக்க கோயில் உள்ளது. இந்த பகுதியில் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் அமைந்துள்ளது. இங்கே அகஸ்தியர் கோயிலின் அருகே அகஸ்தியர் அருவி அமைந்துள்ளது. இந்த அருவியில் பொதுமக்கள், பக்தர்கள் என பலரும் வந்து குளித்து செல்கின்றனர்.



மேலும் இந்த பகுதியில் நுழைவதற்கு நுழைவுக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த நுழைவு கட்டணம் உள்ளூர் மக்களிடமும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்த அருவியில் குளிப்பதற்கு மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு தமிழ்நாடு வனத்துறை, களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம் சார்பாக பணம் வசூலிக்கப்படுகிறது.

அருவியில்குளிப்பதற்கு மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கு பணம் வசூல் செய்வது பேரூராட்சி, நகராட்சி அல்லது பஞ்சாயத்து ஆகியோர் மட்டுமே செய்ய வேண்டும். ஆனால், வனத்துறை அலுவலர்கள் இணைந்து பணம் வசூல் செய்வது ஏற்கத்தக்கதல்ல. மேலும் நுழைவு கட்டணம் என்பது உள்ளூர் பொதுமக்களிடமும் வசூலிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே அகஸ்தியர் கோயிலுக்கு வரும் வாகனங்களுக்கும், உள்ளூர் பொது மக்களுக்கும் நுழைவு கட்டணம் வசூலிப்பதற்கு தடை விதிக்க வேண்டும்." என மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் நிஷா பானு மற்றும் நீதிபதி ஸ்ரீமதி ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது வனத்துறை தரப்பில் நுழைவு கட்டணம் வசூலிப்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நீதிபதிகள் " சொரிமுத்து அய்யனார் கோவில், அகஸ்தியர் கோவில் மற்றும் அகஸ்தியர் அருவிக்கு செல்லும் உள்ளூர் மக்களிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது" என்று உத்தரவு பிறப்பித்தனர். இந்த உத்தரவால் அம்பாசமுத்திரம் மற்றும் அதனை சுற்றியுள்ள உள்ளூர் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## சென்னை திரும்பிய கனிமொழி எம்.பி.க்கு உற்சாக வரவேற்பு

சென்னை, ஜூன் 5

ஜம்முகாஷ்மீரின்பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து, இந்தியா மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து சர்வதேச நாடுகளுக்கு விளக்குவதற்காக அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் உள்ளடக்கிய 7 குழுக்கள் உருவாக்கப்பட்டன.

இந்தியா நடத்திய ஆபரேஷன் சிந்தூர் தொடர்பாகவும், பயங்கரவாதிகளுக்குப் பாகிஸ்தான் தஞ்சம் அளிப்பது, நிதி உதவி வழங்குவது உள்ளிட்ட தகவல்கள் குறித்தும் உலக நாடுகளுக்கு ஆதாரங்களுடன் விளக்கமளிக்க அனைத்துக் கட்சி எம்.பிக்கள் அடங்கிய 7 குழுக்களை ஒன்றிய அரசு அறிவித்தது. அதன்படி, எம்.பிக்கள் அடங்கிய குழுக்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தலைவர்களைச் சந்தித்து விளக்கமளித்து வருகின்றனர்.



இக்குழுவில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பிக்கள் குழு ரஷ்யா, கிரீஸ், ஸ்லோவேனியா, லாட்வியா, ஸ்பெயின் நாட்டிற்கு சென்று பிரதிநிதிகளை சந்தித்து, இந்தியாவில் பாகிஸ்தான் ஆதரவுடன் நடைபெறும் பயங்கரவாதம் குறித்தும், 'ஆபரேஷன் சிந்தூர்' தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை குறித்தும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

தீவிரவாதத்தை எதிர்த்து போராடும் இந்தியாவின் முயற்சிகளுக்கு ரஷ்யா, ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் முழு ஆதரவு அளிப்பதாக கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பிக்கள் குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்றுடன் ஸ்பெயின் நாட்டில் கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்பிக்கள் குழுவின் சுற்றுப்பயணம் நிறைவடைந்தது.

இந்த நிலையில், சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு, திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் விமான நிலையத்தில் பூங்கொத்து வழங்கி, மேளதாளம் ஒலிக்க உற்சாக வரவேற்பளித்தனர்.

## ஒரு வட்ட செயலாளர், மாவட்ட செயலாளரிடம் பேசியது எப்படி குற்றச்சாட்டாகும்? அண்ணாமலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கேள்வி

சென்னை, ஜூன் 5

பிளைட் மோடில் இருந்த செல்பேசியை ஆன் செய்தபோது ஞானசேகரன் முதலில் காவல் அதிகாரியிடம் பேசினார். அடுத்த ஞானசேகரன் திமுக நிர்வாகி கோட்டூர் சண்முகத்திடம் அடிக்கடி பேசினார். இந்த சண்முகம் அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் தொடர்பில் இருப்பவர். அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில் அமைச்சர் மா.சுப்பிரமணியனை விசாரிக்காதது ஏன்? ஞானசேகரன் கைது செய்யப்பட்டு உடனடியாக விடுவிக்கப்பட்டது ஏன்? என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

இந்தநிலையில், சென்னை எழும்பூர் மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர் பாபு ஆகியோர் மோதிரம் அணிவித்தனர். அதனை தொடர்ந்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:




அண்ணா பல்கலைகழக சம்பவத்தை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது. காவல் துறை மிகச்சிறப்பாகநடவடிக்கைஎடுத்து 5 மாதத்தில் தண்டனை தரப்பட்டுள்ளது. லீசாரின் நடவடிக்கைக்கு நீதிபதி பாராட்டு தெரிவித்து உள்ளார். அண்ணாமலை கூறியதை நானும் பார்த்தேன். அவர், சண்முகம் என்ற வட்டச் செயலாளர் என்னை அழைத்ததாக தெரிவித்து உள்ளார். இது ஒரு குற்றச்சாட்டா?

52 வட்ட செயலாளர்கள் உள்ளனர். அவர்களில் சண்முகமும் ஒருவர். ஒரு வட்ட செயலாளர், மாவட்ட செயலாளரிடம் பேசியது எப்படி குற்றச்சாட்டாகும்? ஒவ்வொரு நாளும் 10 15 பேர் எனக்கு போனில் அழைப்பார்கள். வட்ட செயலாளர் போன் செய்தார். இதனால், சுப்பிரமணியனை விசாரிக்க வேண்டும் என சொல்கின்றனர். இது என்ன குற்றச்சாட்டு என்று எனக்கு தெரியவில்லை. அவருக்கு தெரியுமா என தெரியவில்லை.


இவ்வாறு அவர் கூறினார்.

## நீட் மறு தேர்வு நடத்த முடியாது: சென்னை ஐகோர்ட்டில் மத்திய அரசு திட்டவட்டம்

சென்னை, ஜூன் 5

மருத்துவப் படிப்பிற்காக நீட் நுழைவுத் தேர்வு (இளநிலை) 2025 இந்தியா முழுவதும் பல்வேறு மையங்களில் கடந்த 4ம் தேதி நடத்தப்பட்டது. சென்னையை அடுத்த ஆவடி மையத்தில் 464 மாணவர்களுக்கு தேர்வு எழுத நுழைவுச்சீட்டு வழங்கப்பட்டது. பிற்பகல் 2 மணிக்கு தேர்வு தொடங்கிய நிலையில் கனமழை காரணமாக 3 மணியில் இருந்து 4.15 மணி வரை மின்தடை ஏற்பட்டது. இதனால் அந்த மையத்தில் தேர்வெழுதிய மாணவர்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதையடுத்து, தங்களுக்கு மறு தேர்வு தேவை என ஆவடி தேர்வு மையத்தில் தேர்வெழுதிய 16 மாணவர்கள் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

மின்தடையால்குறைந்த வெளிச்சத்தில் தேர்வு எழுதியதாகவும், கவனச்சிதறலால் முழு திறமையுடன் தேர்வு எழுதவில்லை என்றும், தங்களுக்கு மறு தேர்வு தேவை எனவும் மாணவர்கள் தங்களது மனுவில் தெரிவித்து இருந்தனர். இதனால் நீட் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்கால தடை விதித்தது. இந்நிலையில், இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மின்தடை காரணமாக நீட் தேர்வில் எந்த பாதிப்பும் ஏற்படாத நிலையில் மறுதேர்வு நடத்தமுடியாது என மத்திய அரசு தெரிவித்தது. இதையடுத்து, வரும் 6ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என சென்னை ஐகோர்ட் தெரிவித்துள்ளது.




## தூத்துக்குடியில் கொலை வழக்கில் முதியவருக்கு ஆயுள் தண்டனை

தூத்துக்குடி ஜூன்5

தூத்துக்குடி மாவட்டம், குரும்பூர் மேலபுதுக்குடி பகுதியைச் சேர்ந்த அருணாச்சலம் மகன் மூக்காண்டி (வயது 70) என்பவரை கடந்த 19.12.2015 அன்று முன்விரோதம் காரணமாக குரும்பூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வைத்து கொலை செய்த வழக்கில் மேலபுதுக்குடி பகுதியைச் சேர்ந்த பால்பாண்டி மகன் ஜெயபால்(65) என்பவரை



குரும்பூர் காவல் நிலைய போலீசார் கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தாண்டவன் நேற்று (2.6.2025) ஜெயபாலுக்கு ஆயுள்தண்டனை மற்றும் ரூ.10 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய குரும்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்ககிருஷ்ணன் மற்றும் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் ஆனந்த் கேப்ரியல்ராஜ், விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு எப்சி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

## தூத்துக்குடி: கொலை வழக்கில் 4 வாலிபர்களுக்கு ஆயுள் தண்டனை

தூத்துக்குடி ஜூன் 5

தூத்துக்குடி,திரேஷ்புரம் பகுதியில் கடந்த 2020ம் ஆண்டு முன்விரோதம் காரணமாக அதே பகுதியைச் சேர்ந்த கோபுரத்தான் மகன் காளிமுத்து (வயது 39) என்பவரை கட்டையால் தாக்கி கொலை செய்த வழக்கில் தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியைச் சேர்ந்தவர்களான கிளாட்சன்மகன்கிஸ்ஸிங்கர்(33), ரெஸ்லிங் மகன் லிவிங்ஸ்டன்(24), தூத்துக்குடி வாட்டர்டேங்க் பகுதியைச் சேர்ந்த ஜோக்கின்ஸ் மகன் மரியஜெர்மன்(25), தூத்துக்குடி வெற்றிவேல்



புரத்தைச் சேர்ந்த ராஜா மகன்ரபேக்வேதா(25) மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த இளம்பிழையாளி ஆகியோரை வடபாகம் காவல் நிலைய போலீசார் கூட்டாக சேர்ந்து தாக்கிய குற்றப்பிரிவின் கீழும், கொலை குற்றப்பிரிவின் கீழும் வழக்கு பதிவு செய்து கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை மாவட்ட 2வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ப்ரீத்தா இன்று (3.6.2025) கிஸ்ஸிங்கர், லிவிங்ஸ்டன், மரியஜெர்மன், ரபைக்வேதா ஆகிய 4 பேருக்கு, கூட்டாக சேர்ந்து தாக்கியதற்கு தலா 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை,ரூ.1,000 அபராதம்மற்றும்கொலை குற்றத்திற்காக ஆயுள் தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய தூத்துக்குடி வடபாகம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் சேவியர் ஞானப்பிரகாசம், விசாரணைக்கு உதவியாக இருந்த முதல்நிலை காவலர் சிலம்பரசன் ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

## மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் சுங்கக் கட்டணம் வசூலிக்க தடை

மதுரை, ஜூன் 5

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகேயுள்ள எலியார்பத்தி என்னும் இடத்தில் அமைந்துள்ள சுங்கச் சாவடியில் கடந்த 2011ஆம் ஆண்டுமுதல் எந்த பராமரிப்புப் பணியும் செய்யப்படவில்லை. இதனால் சாலைகள் குண்டும், குழியுமாக உள்ளன. பேருந்துகள் அடிக்கடி பழுதாகின்றன. மேலும், அடிக்கடி விபத்துகளும் நிகழ்கின்றன.

இதனையடுத்து, சேதமடைந்துள்ள சாலையை முழுமையாகச் சீரமைக்கும் வரை எலியார்பத்தியிலும் புதூர் பாண்டியபுரத்திலும் உள்ள சுங்கச் சாவடிகளில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்க இடைக்காலத் தடை விதிக்கவேண்டும் என ஐகோர்ட்டு மதுரைக் கிளையில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டது.




இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு மதுரை கிளை, மதுரை தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்து அறிக்கை அளிக்க ஆணையிட்டுள்ளதுடன், எலியார்பத்தி சுங்கச் சாவடி, புதூர் பாண்டியபுரம் சுங்கச் சாவடிகளில் கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது.

## கோவில்பட்டியில் விற்பனைக்கு 3 கிலோ கஞ்சா வைத்திருந்தவர் கைது

தூத்துக்குடி ஜூன் 5

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் உத்தரவின்படி, மதுவிலக்கு அமலாக்க பிரிவு டி.எஸ்.பி. குருவெங்கட்ராஜ் மேற்பார்வையில், கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய இன்ஸ்பெக்டர் மீகா தலைமையில், சப் இன்ஸ்பெக்டர் முருகதாஸ் மற்றும் போலீசார் இன்று (3.6.2025) கோவில்பட்டி, தோட்டிலோவன்பட்டி சோதனை சாவடி அருகே ரோந்து பணி மேற்கொண்டனர்.

அப்போது அங்கு சந்தேகப்படும்படி வந்த நபரை பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். அதில் அவர் கோயம்புத்தூர், உடையாம்பாளையம் பகுதியைச் சேர்ந்த ஏசுவடியான் மகன் சாமுவேல்ராஜ் (வயது 42) என்பதும் அவர் விற்பனைக்காக கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது.



உடனடியாக மேற்சொன்ன போலீசார் சாமுவேல்ராஜை கைது செய்து அவரிடமிருந்த 3 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து கோவில்பட்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர்.

## மனைவி இல்லாமல் தவிப்பு...இளம்பெண்ணிடம் அத்துமீறிய கார் டிரைவர்

சென்னை, ஜூன் 5

சென்னை வேளச்சேரியில் உள்ள வணிக வளாகத்தில் 30 வயதான இளம்பெண்ணி ஒருவர் அழகு கலை நிபுணராக பணியாற்றி வருகிறார். நேற்று இரவு இவர் பணியை முடித்துவிட்டு வேளச்சேரி சாலையில் உள்ள கடையில் இட்லி மாவு வாங்கி விட்டு நடந்து சென்று கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்களில் வந்த அடையாளம் தெரியாத வாலிபர் அந்த பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்து விட்டு தப்பி ஓடிவிட்டார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் இது குறித்து வேளச்சேரி போலீசில் புகார் அளித்தார்.



இதைத்தொடர்ந்து போலீசார் அதே பகுதியில் உள்ள 70 கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். இதையடுத்து கிண்டியை சேர்ந்த வினோத் (வயது 28) என்பவர்தான் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது தெரியவந்தது. போலீசார் அவரை கைது செய்தனர். விசாரணையில் வினோத் கார் டிரைவர் என்பதும் மனைவி, குழந்தைகள் வெளியூர் சென்று இருந்ததால் கடந்த ஒரு மாதமாக மனைவி இல்லாததால் இல்லற வாழ்வில் ஈடுபட முடியாமல் தவியாய் தவித்து வந்ததும் அதன் காரணமாகவே மது போதையில் இளம்பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
5.6.2025

# திருநெல்வேலி: சாட்சி சொல்பவரை கல்லால் தாக்கி மிரட்டிய வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 5

திருநெல்வேலி மாவட்டம், வி.கே.புரம், சேர்வலாறை சேர்ந்த மாடசாமி (வயது 31) என்பவர் மீது வி.கே.புரம் காவல் நிலையத்தில் பாலியல் வன்புணர்ச்சி வழக்கு பதியப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகிறது. இவ்வழக்கின் சாட்சியாக இருந்து வரும் மாடசாமியின் வீட்டின் அருகே வசிக்கும் அசோக்குமார்(47) என்பவரிடம் சாட்சி சொல்லக்கூடாது என்று மாடசாமி அவரை பார்க்கும் போதெல்லாம் கூறி வந்துள்ளார்.

இந்நிலையில் அசோக்குமார் தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த மாடசாமி, அசோக்குமாரிடம் தகராறில் ஈடுபட்டு அவதூறாகபேசி, கல்லால் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார்.

இதுகுறித்து அசோக்குமார் வி.கே.புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் சமுத்திரராஜன்வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு மாடசாமியை நேற்று (2.6.2025) கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த உரிய சட்ட நடவடிக்கை எடுத்தார்.

# திருப்பத்தூர்: ஆந்திராவில் இருந்து காரில் செம்மரக்கட்டைகள் கடத்திய வாலிபர் கைது



திருப்பத்தூர், ஜூன் 5

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி வழியாக ஆந்திராவில் இருந்து காரில் செம்மரக் கட்டைகள் கடத்தி வருவதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷ்ரேயா குப்தாவிற்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன் அடிப்படையில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்ட வாணியம்பாடி நகர காவல் துறையினர், வாணியம்பாடி நியூடவுன் பைபாஸ் சாலையில் ஒரு காரை சுற்றி வளைத்து பிடித்தனர்.

அந்த காரில் 8 செம்மரக்கட்டைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, செம்மரக் கட்டைகளை கடத்தி வந்த ஜமுனமரத்தூர் பகுதியைச் சேர்ந்த வெங்கடேசன் (வயது 24) என்பவரை போலீசார் கைதுசெய்தனர். அவரிடம் இருந்து கடத்தலுக்கு பயன்படுத்திய கார் மற்றும் 8 செம்மரக்கட்டைகள் பறிமுதல் செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# மருமகள், பேரனை துப்பாக்கியால் சுட்ட விவசாயி... குடும்ப தகராறில் விபரீதம்



சேலம், ஜூன் 6

சேலம்மாவட்டம், வாழப்பாடிதாலுகா, தேக்கல்பட்டி ஏரிக்கரை பகுதியை சேர்ந்தவர் குப்புசாமி (வயது 52), விவசாயி. இவருடைய மனைவி லட்சுமி. இவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் செய்து கொண்டு அங்குள்ள விவசாய தோட்டத்தில் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு மாதேஷ் (29), சுரேஷ் (27) என்ற 2 மகன்களும், பரமேஸ் (24) என்ற ஒரு மகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் ஆகி வெவ்வேறு ஊர்களில் உள்ளனர்.

தேக்கல்பட்டி மந்தகாடு பகுதியில் உள்ள விவசாய தோட்டத்தில் சுரேஷ், அவருடைய மனைவி அனிதா (25), அவர்களின் மகனான 1½ வயது ஆண் குழந்தை சர்வபுத்திரன் ஆகியோரும் வசித்து வந்தனர். நேற்று சுரேஷ் கூலி வேலைக்கு வெளியே சென்றார். மதியம் குப்புசாமி குடிபோதையில் இருந்ததாக கூறப்படுகிறது. அப்போது குடும்பத்தகராறு காரணமாக குப்புசாமியும், லட்சுமியும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தகராறு முற்றிய நேரத்தில் அங்கிருந்த கட்டையால் லட்சுமியைகுப்புசாமிதலையில்தாக்கியதாகதெரிகிறது. அப்போது மாமியார் லட்சுமிக்கு ஆதரவாக மருமகள் அனிதா தனது 1½ வயது குழந்தை சர்வ புத்திரனை இடுப்பில்சுமந்தபடிசென்றுகுப்புசாமியைதடுத்துள்ளார். இதில் ஆத்திரமடைந்த குப்புசாமி, அரசு அனுமதி இன்றி கள்ளத்தனமாக வைத்திருந்த நாட்டுதுப்பாக்கியால் மருமகள் அனிதாவை நோக்கி சுட்டார்.

நாட்டுதுப்பாக்கியில்இருந்துபாய்ந்தஇரும்புபால்ரஸ் குண்டுகள் குழந்தை சர்வபுத்திரன் மற்றும் அனிதா மீது பாய்ந்தது. இதனால் இருவரும் வலியால் அலறி துடித்தனர். அக்கம்பக்கத்தினர் அவர்களை மீட்டு வாழப்பாடியில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்த்தனர். படுகாயமடைந்த குழந்தை சர்வபுத்திரன் சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

தலையில் பலத்த காயத்துடன் மாமியார் லட்சுமி, கை மற்றும் கால் பகுதியில் குண்டு காயங்களுடன் அனிதா ஆகிய இருவரும் வாழப்பாடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து வாழப்பாடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனிடையே துப்பாக்கியால் சுட்டுவிட்டு மாயமான குப்புசாமியைவாழப்பாடிபோலீசார்தேடிவருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (5.6.2025)

மேஷம்: முதலீடுகள் நன்மை தரும்; ஆனால் முடிவெடுக்கத் தயக்கம் தேவை. குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும்.

ரிஷபம்: சொத்து முதலீடுகள் வாய்ப்பு அதிகம்; கடன்தவிர்க்கவேண்டியது அவசியம். பணியிட சிக்கல்கள் திர்பார்க்கப்படுகின்றன.

மிதுனம்: புதியவாய்ப்புகள்மற்றும்ஊடகத்தில் முன்னேற்றம் காணப்படும். உறவுகளில் கவனம் தேவை.

கடகம்: செலவுகள் அதிகரிக்கும், ஆனால் திட்டமிடல்மூலம்நன்மைகிடைக்கும். உணர்ச்சி மற்றும் மன அழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

சிம்மம்: பிசியான வேலையிலும் உடல் நலம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் ஆதிக்கம் காட்டும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் இது.

கன்னி: எதிர்பார்த்த லாபம் பெறும், ஆனால் செலவு கட்டுப்பாடு தேவை. பழைய நோய்கள் மீண்டும் தோன்றலாம்.

துலாம்: முன்பே செய்த முதலீடுகள் லாபம் தரும் நிலையில் இருக்கும். பணியிடத்தில் அதிகப்படியான பணிச்சுமையால் மனக்கவலை அதிகரிக்கும்.

விருச்சிகம்: தொழிலில் புதிய முயற்சிகள் விருப்பமாக அமையும், ஆனால் நிதியான அணுகுமுறை அவசியம். உறவுகளில்நெருக்கம்அதிகரிக்கும்.

தனுசு: தன்னம்பிக்கை அதிகரிக்கும், செலவு கட்டுப்பாடு தேவை. குடும்பத்தில்சவால்கள்ஏற்படலாம்.

மகரம்: தொழிலில் தடைகளை கடந்து நிம்மதிக்கு செல்வது. பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

கும்பம்: அந்நிய முதலீடுகள் வாய்ப்பு, திட்டமிடல் தேவை. குடும்பத்தில் நெருக்கம் அதிகரிக்கும்.

மீனம்: தொழிலில் சுமை அதிகரிக்கும், நிதி பலவீனம், கடன்தவிர்க்கவேண்டிய நிலை. ஆன்மீக விழிப்புணர்வு அதிகரிக்கும்.

# ஆன்லைன் விளையாட்டு: தமிழக அரசின் விதிமுறை செல்லும் சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஜூன் 5

தமிழக சட்டசபையில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை முறைப்படுத்துவதற்காக தமிழக ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகள் ஒழுங்குமுறைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக விதிமுறைகள் இயற்றப்பட்டுக் கடந்த பிப்ரவரி 14 ஆம் தேதி அரசிதழில் வெளியிடப்பட்டது. இந்த ஆன்லைன் விளையாட்டுகளை விளையாடுவதற்கு ஆதார் எண்ணை இணைத்ததுடன் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரை விளையாடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. இதை எதிர்த்து விளையாட்டு நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன.

இதையடுத்து இந்த வழக்கானது நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடைபெற்று வந்தது. அதன்படி கடந்த ஏப்ரல் 4ஆம் தேதி மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசின் தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன், கூடுதல் தலைமை வழக்கறிஞர் அமிர்த திவாரி, வழக்கறிஞர் அரவிந்த ஆகியோர் ஆஜராகினர். இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களும் முடிந்த நிலையில் இன்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதில், ஆன்லைன் விளையாட்டுகளுக்கு தமிழக அரசு விதித்திருந்த நேர கட்டுப்பாடு செல்லும் என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். மேலும் விளையாட்டு நிறுவனங்கள் தாக்கல் செய்த மனுக்களை தள்ளுபடி செய்தும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# 'யமன் என்ற படத்தின் மூலம் ஸ்ராவணி ஷெட்டி தமிழில் அறிமுகம்



கடந்த ஆண்டு தெலுங்கு சினிமாவில் அறிமுகமான நடிகை ஸ்ராவணி ஷெட்டி. சமூக வலைதளங்களிலும் பிஸியாக இருக்கும் இவர் தற்போது 'யமன் என்ற படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாக போகிறார்.

ஜகன்னாதா பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கின்ற இந்தப் படத்தில், ஜகதீஷ் அம்மாஞ்சி கதாநாயகனாக நடித்திருப்பதோடு, இப்படத்தை இயக்கியும் இருக்கிறார். இப்படம் வருகிற 13ம் தேதி வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி வைரலானது.

# நடிகை பிரியாமணியின் முதல் தமிழ் வெப் தொடர்



தேசிய விருது பெற்ற நடிகை பிரியாமணி இன்று தனது 41வது பிறந்தநாளை கொண்டாடுகிறார். இதனை முன்னிட்டு பிரபல ஓடிடி தளமான ஜியோ ஹாட்ஸ்டார், அவர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் புதிய வெப் தொடரை அறிவித்துள்ளது.

பழம்பெரும் நடிகையும் திரைப்பட இயக்குனருமானரேவதி இயக்கும் இந்த வெப் தொடருக்கு 'குட் வைப்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது பிரியாமணி நடிக்கும் முதல் தமிழ் வெப் தொடராகும். இந்த வெப் தொடரில் அவருடன் சம்பத் ராஜ் மற்றும் ஆரி அர்ஜுனன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இதன் ரிலீஸ் தேதி விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 'தக் லைப்' படத்தை இணையத்தில் வெளியிட தடை



'தக் லைப்' படத்தை இணையத்தில் வெளியிட தடை விதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்த தக் லைப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கன்னடம் , தமிழிலிருந்து உருவானது என்று கமல்ஹாசன் கூறியதற்கு கர்நாடகாவில் கடுமையான எதிர்ப்புகள் எழுந்து வருகிறது.

இந்த விவகாரம் கோர்ட்டு வரை சென்றது. நேற்று நடைபெற்ற இந்த வழக்கு தொடர்பான விசாரணையில், கர்நாடகாவில் 'தக் லைப்' படத்தை இப்போது வெளியிடவில்லை. படத்தின் வெளியீட்டுதேதியைத்தள்ளிவைப்பதாகவும், இந்தவிவகாரத்தில் ஒரு வார கால அவகாசம் தேவை என்றும் கமல் தரப்பினர் கேட்டனர்.

கர்நாடகாவில் படம் வெளியாகாவிட்டால், வருவாயில் 7 சதவீதம் இழப்பு ஏற்படும் என வர்த்தக ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். இந்நிலையில், 'தக் லைப்' படத்தை இணையத்தில் சட்ட விரோதமாக வெளியிட தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. 'தக் லைப்' இணைய தளங்களில் வெளியாவதை தடுக்க நடவடிக்கை எடுக்க இணையதள சேவை நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 'தக் லைப்' பட தயாரிப்பு நிறுவனம் தொடந்த வழக்கில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# 'பென்ஸ்' புதிதாக இணைந்த நடிகர் யார்? கிளிம்ப்ஸ் வெளியீடு




லோகேஷ் கனகராஜ் தயாரிப்பில் ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகி வரும் படம் 'பென்ஸ்'. பாக்யராஜ் கண்ணன் இயக்கும் இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் இதற்கு முன்பு வெளிவந்த 'விக்ரம், கைதி, லியோ' போன்ற படங்களை போல, 'பென்ஸ்' படமும் (லோகேஷ் சினிமாடிக் யூனிவர்ஸ்) எல்.சி.யூவில் இணைந்துள்ளது. இதனால் இந்த படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகமாகி உள்ளது.

இதற்கிடையில், இப்படத்தில் புதிதாக இணைந்திருக்கும் நடிகரையும் அவரது கதாபாத்திரத்தையும் இன்று மாலை 5 மணிக்கு படக்குழு அறிமுகப்படுத்த உள்ளது. அதற்கு முன்னதாகதற்போதுஅதுகுறித்தகிளிம்ப்ஸ்வீடியோ வெளியாகி உள்ளது.

அது மலையாள நடிகர் நிவின் பாலியாக இருக்கும் என ரசிகர் கமெண்ட் செய்து வருகின்றனர். தோல்விப்படங்களால் பாதிக்கப்பட்ட நிவின் பாலிக்கு பென்ஸ் திருப்புமுனையாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# போட்டியின் திருப்புமுனை இதுதான் தோல்விக்கு பின்னர் ஸ்ரேயாஸ் பேட்டி




10 அணிகள் பங்கேற்றிருந்த 18வது ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு பஞ்சாப் கிங்ஸ் அணிகள் விளையாடின. இந்த போட்டிக்கான டாசில் வென்ற பஞ்சாப் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவரில் 9 விக்கெட்டை இழந்து 190 ரன்கள் எடுத்தது. பெங்களூரு தரப்பில் அதிகபட்சமாக விராட் கோலி 43 ரன்கள் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங், கைல் ஜேமிசன் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

தொடர்ந்து 191 ரன் எடுத்தால் சாம்பியன் பட்டத்தை வெல்லலாம் என்ற நிலையில் களம் புகுந்த பஞ்சாப் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 184 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 6 ரன் வித்தியாசத்தில் பெங்களூரு திரில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

பஞ்சாப்தரப்பில்அதிகபட்சமாகஷஷாங்சிங் 61 ரன்கள்எடுத்தார். ஆர்.சி.பிதரப்பில்அதிகபட்சமாக புவனேஷ்வர், குருனால் பாண்ட்யா தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இந்நிலையில், இந்த போட்டியில் தோல்வி கண்ட பின்னர் பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் ஐயர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

உண்மையை சொல்ல வேண்டுமென்றால் இந்த தோல்வி வருத்தமாக இருக்கிறது. ஆனால், எங்கள் வீரர்கள் எப்படி வாய்ப்பை எடுத்து கொண்டார்கள் என்பது சிறப்பாக இருக்கிறது. மேலும், எங்கள் அணியில் ஆதரவு ஊழியர்கள் முதல் உரிமையாளர்கள் வரை அனைவரும் சிறப்பானவர்கள். போட்டியை காண வந்துபங்களித்த ஒவ்வொருவருக்கும் நன்றிகள்.

கடந்த போட்டியை வைத்து பார்க்கும் பொழுது இங்கு 200 ரன்கள் சரியானதுதான் என நினைத்தேன். அவர்கள்அற்புதமாகபந்தவீசினார்கள். குருனால்பாண்டியாகுறிப்பாகசிறப்பாகஇருந்தார். அவருக்கு நிறைய அனுபவம் இருக்கிறது அதை பயன்படுத்தினார். அதுதான் ஆட்டத்தின் திருப்புமுனை (இங்கிலிஸ் விக்கெட்டை வீழ்த்தியது).

எங்கள் இளம் வீரர்கள் ஒவ்வொருவர் குறித்தும் நான் பெருமைப்படுகிறேன். அவர்கள் அனைவரும் அச்சமற்ற முறையில் விளையாடினார்கள். நாங்கள் அடுத்த ஆண்டு திரும்பி வந்து சிறப்பாக விளையாடி இந்த கோப்பையை வெல்வோம். எங்களால் மீண்டும் நல்ல கிரிக்கெட்டை விளையாட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

# சர்வதேச கால்பந்து போட்டி: இந்தியா தாய்லாந்து மோதல்




இந்தியா தாய்லாந்து அணிகள் இடையிலான சர்வதேச நட்புறவு கால்பந்து போட்டி தாய்லாந்தில் உள்ள பதும் தானி நகரில் உள்ள தம்மாசாட் ஸ்டேடியத்தில் இன்று நடக்கிறது. உலக தரவரிசையில் 127வது இடத்தில் இருக்கும் இந்திய அணி, ஆசிய கோப்பை தகுதி சுற்றில் தனது அடுத்த ஆட்டத்தில் வருகிற 10ந் தேதி ஹாங்காங்கை அதன் சொந்த மண்ணில் சந்திக்கிறது.

இதேபோல் தரவரிசையில் 99வது இடத்தில் இருக்கும் தாய்லாந்து அணி, துர்க்மெனிஸ்தானை எதிர்கொள்கிறது. ஆசிய கோப்பை போட்டிக்கு சிறப்பாக தயாராவதற்கு இந்த நட்புறவு ஆட்டம் உதவிகரமாக இருக்கும். இவ்விரு அணிகளும் இதுவரை 26 முறை நேருக்கு நேர் மோதி இருக்கின்றன.

இதில் இந்தியா 7 ஆட்டத்திலும், தாய்லாந்து 12 ஆட்டத்திலும் வெற்றி பெற்று இருக்கின்றன. 7 ஆட்டங்கள் டிராவில் முடிந்தது. மாலை 6 மணிக்கு தொடங்கும் இந்த ஆட்டத்தை பேன்கோடு செயலியில் பார்க்கலாம்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.